


செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி பம்மல் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் ஸ்ரீ கணேஷ் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்வு சிறப்பு முகாமில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார். இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், மண்டலக் குழுத் தலைவர் வே.கருணாநிதி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.02.2025), பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், வார்டு–139க்குட்பட்ட ஜாபர்கான்பேட்டை, ஆர்.ஆர்.காலனியில் மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியின் கீழ்ரூபாய் 37 லட்சம் மதிப்பில் குத்துச்சண்டை, கேரம், சதுரங்கம் ஆகிய விளையாட்டுகளை உள்ளடக்கிய பயிற்சிக்கான பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மத்திய வட்டார துணை ஆணையர் கே.ஜெ.பிரவின் குமார், மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த.விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர் திரு.ப.சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருநீர்மலை த.ஜெயக்குமார் வரவேற்புரை! பம்மல் வடக்குப் பகுதியில்

## மார்ச் 1- முதல்வர் பிறந்தநாள் - 76 இடங்களில் கழகக் கொடியேற்றி நல உதவிகள் வழங்கல்!

### இ.கருணாநிதி - எஸ்.ஆர்.ராஜா - கோ.காமராஜ் - வே.கருணாநிதி – எஸ்.கே.நெப்போலியன் – கே.சந்திரன் பங்கேற்றனர்!

காஞ்சிபுரம், பிப். 22-

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் 20.2.2025, வியாழக்கிழமை அன்று மாலை 5.30 மணியளவில் பம்மல் எஸ்.எஸ். மஹாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமை வகித்தார். எஸ்.கே.நெப்போலியன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, சி.பார்த்தசாரதி, இரா.குமரேசன், இரா.பாபுஜி, க.சுந்தரமூர்த்தி, மு.நித்யானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பம்மல் வடக்கு பகுதி தி.மு.க செயலாளர் திருநீர்மலைத.ஜெயகுமார் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., துணை மேயர் கோ.காமராஜ், வே.கருணா நிதி, அ.தமிழ்மாறன், இரா.நரேஷ் கண்ணா, கோல்டு டி.பிரகாஷ், பேராசிரியர் எல்.பிரபு, வி.ரவிச்சந்திரன், சத்தியபிரபு, ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப், கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜய குமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் பம்மல் வடக்கு பகுதிக்கு உட்பட்ட தாம்பரம் மாநகர நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட மாநகர பகுதி வட்டக் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மார்ச் 1 தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்தநாளையொட்டி, பம்மல் வடக்குப் பகுதியில் 76 இடங்களில் கழகக் கொடியேற்றி நல உதவிகள் வழங்கப்படும் என முடிவு செய்யப்பட்டது.

ச.பிரபு, ஞா.பிரபு, ஏ.செந்தில்குமார் ஆகியோர் நன்றி கூறினர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் – தாம்பரம் மாநகரம்

## தாம்பரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் மாடம்பாக்கம் லயன் ஆ.நடராஜன் அறிக்கை!

தாம்பரம், பிப். 22

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், தாம்பரம் கிழக்குப் பகுதிக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (22 2.2025 சனிக்கிழமை) மாலை 6 மணி அளவில், பராசக்தி நகரில் உள்ள 66 வது வார்டு வட்டக் கழக அலுவலகத்தில் பகுதிக் கழக அவைத் தலைவர் வி.ஜெயராமன் தலைமையிலும், பகுதிக் கழக நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: வரலாற்றில் இயக்கத்தின் மாபெரும் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழாவினை பகுதிக் கழகம் முழுவதும் எழுச்சியுடன் கொண்டாடுவது சம்பந்தமாகவும் மற்றும் கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு தாம்பரம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மாடம்பாக்கம் லயன் ஆ.நடராஜன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில்

## சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் வேண்டுகோள்!

சென்னை, பிப். 22

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம் நாளை (23.02.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில், நுங்கம்பாக்கம், காத்தார் நகர், முதல் தெருவில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. தலைமையில் ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் எஸ்.ராம்குமார் முன்னிலையில், சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் (சி.கே.ரெங்கராஜ்) நான் அனைவரையும் வரவேற்று பேசுகிறேன்.

எனவே இக்கூட்டத்தில் தலைவர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் (மார்ச் 1) ‘எளியோர் எழுச்சி நாள்’ விழா, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் சி.கே.ரெங்கராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை! காஞ்சிபுரம் மாநகரம் 2வது பகுதியில்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள்விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கம்பம் செல்வேந்திரன் சிறப்புரை

காஞ்சிபுரம்,,பிப், 22

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், காஞ்சிபுரம் மாநகரம், 2வது பகுதிக் கழகம் 28 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வ.கமலக்கண்ணன் ஏற்பாட்டில், கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (22.02.2025சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு பட்டாளத் தெரு, டோல்கேட் , சின்ன காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை வகிக்கிறார்.

2வது பகுதிச் செயலாளர்,2 வது மண்டலக்குபத் தலைவர் எஸ்.சந்துரு அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

கோ.எல்லப்பன், வி.கோவிந்தராஜ்,கே.சிவகுமார்,ஜெ.நித்யா,வ.ராமமூர்த்தி, சீ.ஸ்ரீதர், ஆர்.செந்தில்குமார், ஆர்.வேல்முருகன், த.ரகு, எஸ்.சுகுமாரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம் மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் பெ.செல்வேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.,மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், சன்பிராண்ட் கே.ஆறுமுகம்,எஸ்.கே.பி.சீனிவாசன்,எஸ்.சிகாமணி,கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ்.முத்துச்செல்வம் ,வ.ஜெகன்நாதன், பி.நிர்மலா, கு.சுப்பராயன்,அ.யுவராஜ், கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், ஜி.சுகுமாரன், தி.அன்பழகன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், பெ.சுந்தரவரதன், ஜி.சசிகலா, எஸ்.கே.பி.சாந்தி சுனிவாசன், செவிலிமேடுஎஸ்.மோகன்,ப.சுரேஷ், த.விஸ்வ நாதன், எஸ்.மாமல்லன், பி.சங்கர்,ஜெ.வரதராஜன்,எஸ்.சேகர், அ.பாலமுருகன்,

நாத்திகம் நாகராசன், கே.ஏ.இளங்கோவன், வ.மலர்மன்னன், ஏ.செல்வி, டி.ஜெய்கணேஷ்,டி.வெங்கட்ராமன்,ப.சுமார், ஆர்.ஏ.மணிகண்டன்,டி.சிலம்புச்செல்வன்,ரா.கார்த்திக், எ.குணசேகரன்,எம்.கே. நந்தா என்கிற விநாயகமூர்த்தி, சாட்சி ஜெ.சண்முகசுந்தரம், ஜெ.தேவிகா,எஸ்.லலிதா, ஆர்.விஜயலசுமி, டாக்டர்அன்புசெல்வன், பி.எஸ்.ரமேஷ், இ.ஜாபர், என்.மாதவன், டி.விஜயகுமார், த.அருணாச்சலம், ஜெ.இளங்கோவன்,டி.கருணாநிதி, த.சுதர்சன், ஆர்.குணசேகரன், எஸ்.ராஜு, பூரணி கண்ணமாள், வீனஸ் எம்.உதயகுமார், இ.பன்னீர்செல்வம்,சி.எல்.கோவிந்தராஜன், என்.கே. துரை,கே.வெங்கடேசன்,கோமதி நீலகண்டன்,ஷொயேப் கான், சையத் குடுபாஷா,கே.சிவா, எஸ்.தனசேகரன், இ.ராஜரத்தினம்,பா.மோகன், ஆர்.முரளி, டி.சங்கர், சி.புவனகிரி,அ.சரவணன், எஸ்.பிரசாந்த், பு.தெய்வசிகாமணி,

ஜி.குமரன், எஸ்.ஷர்மிளா, எம்.சங்கர், இலக்கியா சுகுமார், சித்ரா இராமசந்திரன், பூங்கொடிதசரதன், எஸ்.அஸ்மாபேகம், பிரியா குழந்தைவேலு, எம்.தேவராஜ், சரஸ்வதி பாலமுருகன்,கே.குமரவேல், மல்லிகா ராமகிருஷ்ணன்,சோபனா கண்ணன், ரமணி பொன்னம்பலம், சரளா சம்பத், எஸ்.அன்பழகன் கயல்விழி சூசையப்பர்,

மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். 25 வது வட்டக் கழகச் செயலாளர் 28 வது மாமன்ற உறுப்பினர் வ.கமலக்கண்ணன் நன்று கூறுகிறார்.

### எம்.சக்தி தலைமை! புனித தோமையார் மலை

## வடக்கு ஒன்றியம் சார்பில் செயல் வீரர்கள் கூட்டம்! அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

### ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி அறிக்கை!

சென்னை, பிப்.22-

புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மூவரசம்பட்டுஜி.கே.விவேகானந்தன் (எ) ரவி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் ஒன்றிய அவைத்தலைவர் எம். சக்தி தலைமையில் ஒன்றிய கழகச் செயலாளர் ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி முன்னிலையிலும் நாளை (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி அளவில் கலைஞர் அரங்கம் (மூவரசம்பட்டு பஞ்சாயத்து அலுவலகம் அருகில்) நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர், குறு - சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

எனவே நடைபெற உள்ள கூட்டத்திற்கு புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய கழக அணிகளின் அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர் கழகத்தில் உள்ள அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் சிறப்பாக கொண்டாடுவது குறித்து, கழக வளர்ச்சி பணி குறித்து.

இவ்வாறு புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மூவரசம்பட்டு ஜி. கே. விவேகானந்தன் (எ) ரவி தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவர் பிறந்த நாள் விழா!

## 123வது வட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

### வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை அறிக்கை!

சென்னை, பிப். 22-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட திமுக சார்பில், வரும் மார்ச் 1 மற்றும் மார்ச் மாதம் அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும், வட்ட கழகத்தின் சார்பில் நிகழ்ச்சிகள் நடத்துவது சம்பந்தமாக, வட்ட கழக நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம், இன்று மாலை 22.02.2025 சனிக்கிழமை மாலை 6 மணி அளவில், வட்ட கழக அலுவலகத்தில் நடைபெற இருக்கிறது.

வட்ட அவை தலைவர் எம்.கே.ஆலை ஆனந்த் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. முன்னிலையில், சு.வில்லவன், கே.மலர், க.கணபதி, கு.ராஜி, மூ.ஏ.முல்லை வேந்தன், கே.விஜயகுமார் ஆகியோர் பங்கேற்கும் இக்கூட்டத்தில், வட்ட கழக நிர்வாகிகள் தேனை பி.பார்த்திபன், எஸ்.எல்.மணிகண்டன், எம்.உஷா, எஸ்.மாரிமுத்து, பகுதி பிரதி நிதிகள் மு.குப்பன், எஸ்.செல்வமணி, தே.ஜெகநாதன், ஆர்.அசோக்குமார், ஏ.விஜயகுமார் மற்றும் வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, தொகுதி, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ 2, பி.எல்.சி. நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் மு.இ.ஏழுமலை அறிக்கை விடுத்துள்ளார்.



கழக விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் தாட்கோ தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற்றது.அணியின் செயலாளர் அன்னியூர் சிவா எம்.எல்.ஏ முதல்வர் அவர்களின் பிறந்த நாளை திருச்சியில் மிகப் பிரம்மாண்டமாக நடத்திடவும்,அனைத்து மாவட்டங்களிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்களை விளக்கி உரையாற்றினார்.இதில் புதுக்கோட்டை சந்திரசேகர்,சி.ஆர். ராமச்சந்திரன்,ராஜசேகரன்,எஸ். சேதுராமன்,ந.ஆனந்த்,ஜெய வீரபாண்டியன்,செய்யாறு அன்பழகன்,அருண்குமார்,கே.ஆர். என். போஸ்,கைலாசம்,திருவாரூர் சங்கர்,கொடி சந்திரசேகர்,கணேஷ் ஆதித்தன் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மாங்காடு நகர தி.மு.க. அவசர ஆலோசனைக் கூட்டம்!

### நகரக் கழகச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், பிப். 22-

மாங்காடு நகரச் செயலாளர் பட்டூ எஸ்.ஜபருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாங்காடு நகர தி.மு.க. அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (22.02.2025- சனிக்கிழமை) மாலை 7 மணியளவில் மாங்காடு நகர கழக அவைத் தலைவர் எம்.எஸ்.மகேந்திரன் தலைமையில் நகர கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே நகரக் கழக நிர்வாகிகள் வார்டுக் கழகச் செயலாளர்கள் நகரமன்ற உறுப்பினர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்

பொருள்:

1.03.2025 அன்று கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா,

26.03.2025 அன்று பட்டூரில் தலைமை கழக பேச்சாளர் தமிழன் பிரசன்னா பங்கேற்கும் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம்,

3) கழக வளர்ச்சிப் பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தனது ஏற்பாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 19வது வட்டம் மாத்தூர் 3வது பிரதான சாலையில் அமைந்துள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய போது எடுத்த படம். வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெற்ற விழாவில், மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, பி. நிர்மல் குமார்,எஸ். உதயகுமார்,பி. துரைசாமி, பி. ஜெயராஜ், கோவர்த்தனன், குகன், காசி, நாகராஜ், போட்டோ பிரவீன், கங்காதரன், சிவப்பிரகாசம், சரஸ்வதி, பெரியநாயகி, கஸ்தூரி, சுகாசினி, அத்திகுளம் தேவி, சரண்யா, சரஸ்வதி மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர், துணை தலைமை ஆசிரியர், ஆசிரியர் பெருமக்கள், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் திரளாக கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு முதல்வர், கழகத் தலைவர்,மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாடுவதையொட்டி ,தி.மு.க.தொண்டர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், மாநில தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. மாநில தொண்டர் அணித் தலைவர் ஜி.சுகுமாரன்,மாநில தொண்டர் அணி துணைச் செயலாளர்கள் ஆவின் எம்.ஆறுமுகம்,புதுக்கோட்டை சுப.சரவணன்,பி.எம்.முனிவேல், எஸ்.எம்.கே. அண்ணாதுரை,மாநில தொண்டர் அணிப் பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ் ஆகியோர் பங்கேற்றனர். கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டந் தோறும் விளையாட்டுப்போட்டிகளும், நலத்திட்ட உதவிகள் வழங்குவது, ஒலிம்பிக் விளையாட்டின் உள்ள ”தேக்வாண்டோதறகாப்புக்கலை போட்டியினை மாபெரும் அளவில் நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.